# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஆறாம் பத்து

## ஏழாம் திருமொழி - ஆளும் பணியும்
## திருநறையூர் 4

** ஆளும் பணியும் அடியேனைக் கொண்டான் * விண்ட நிசாசரரை *
தோளும் தலையும் துணிவு எய்தச் * சுடு வெஞ்சிலை வாய்ச் சரம் துரந்தான் **
வேளும் சேயும் அனையாரும் * வேற்கணாரும் பயில் வீதி *
நாளும் விழவின் ஒலி ஓவா * நறையூர் நின்ற நம்பியே 1

முனியாய் வந்து மூவெழுகால் * முடி சேர் மன்னர் உடல் துணிய *
தனி வாய் மழுவின் படை ஆண்ட * தாரார் தோளான் வார்புறவில் **
பனி சேர் முல்லை பல் அரும்பப் * பானல் ஒருபால் கண் காட்ட *
நனி சேர் கமலம் முகம் காட்டும் * நறையூர் நின்ற நம்பியே 2

தெள்ளார் கடல் வாய் விட வாய * சின வாள் அரவில் துயில் அமர்ந்து *
துள்ளா வரு மான் வீழ * வாளி துரந்தான் இரந்தான் மாவலி மண் **
புள்ளார் புறவில் பூங்காவி * புலன் கொள் மாதர் கண் காட்ட *
நள் ஆர் கமலம் முகம் காட்டும் * நறையூர் நின்ற நம்பியே 3

ஒளியா வெண்ணெய் உண்டான் என்று * உரலோடு ஆய்ச்சி ஒண்கயிற்றால் *
விளியா ஆர்க்க ஆப்புண்டு * விம்மி அழுதான் மென்மலர் மேல் **
களியா வண்டு கள் உண்ணக் * காமர் தென்றல் அலர் தூற்ற *
நளிர் வாய் முல்லை முறுவலிக்கும் * நறையூர் நின்ற நம்பியே 4

வில்லார் விழவில் வடமதுரை * விரும்பி விரும்பா மல் அடர்த்து *
கல்லார் திரள் தோள் கஞ்சனைக் காய்ந்தான் * பாய்ந்தான் காளியன் மேல் **
சொல்லார் சுருதி முறை ஓதிச் * சோமுச் செய்யும் தொழிலினோர் *
நல்லார் மறையோர் பலர் வாழும் * நறையூர் நின்ற நம்பியே 5

வள்ளி கொழுனன் முதலாய * மக்களோடு முக்கணான்
வெள்கி ஓட * விறல் வாணன் * வியன் தோள் வனத்தைத் துணித்து உகந்தான் **
பள்ளி கமலத்திடைப் பட்ட * பகு வாய் அலவன் முகம் நோக்கி *
நள்ளி ஊடும் வயல் சூழ்ந்த * நறையூர் நின்ற நம்பியே 6

மிடையா வந்த வேல் மன்னர் வீய * விசயன் தேர் கடவி *
குடையா வரை ஒன்று எடுத்து ஆயர் கோவாய் நின்றான் * கூர் ஆழிப்
படையான் ** வேதம் நான்கு ஐந்து வேள்வி * அங்கம் ஆறு இசை ஏழ் *
நடையா வல்ல அந்தணர் வாழ் * நறையூர் நின்ற நம்பியே 7

பந்தார் விரலாள் பாஞ்சாலி * கூந்தல் முடிக்கப் பாரதத்து *
கந்தார் களிற்றுக் கழல் மன்னர் கலங்கச் * சங்கம் வாய் வைத்தான் **
செந்தாமரை மேல் அயனோடு * சிவனும் அனைய பெருமையோர் *
நந்தா வண்கை மறையோர் வாழ் * நறையூர் நின்ற நம்பியே 8

ஆறும் பிறையும் அரவமும் * அடம்பும் சடை மேல் அணிந்து * உடலம்
நீறும் பூசி ஏறூரும் * இறையோன் சென்று குறை இரப்ப **
மாறொன்று இல்லா வாச நீர் * வரை மார்பகலத்து அளித்து உகந்தான் *
நாறும் பொழில் சூழ்ந்து அழகாய * நறையூர் நின்ற நம்பியே 9

** நன்மை உடைய மறையோர் வாழ் * நறையூர் நின்ற நம்பியை *
கன்னி மதிள் சூழ் வயல் மங்கைக் * கலியன் ஒலி செய் தமிழ் மாலை **
பன்னி உலகில் பாடுவார் * பாடு சாரா பழ வினைகள் *
மன்னி உலகம் ஆண்டு போய் * வானோர் வணங்க வாழ்வாரே 10

**அடிவரவு:** ஆளும் முனி தெள்ளார் ஒளியா வில்லார் வள்ளி மிடையா பந்தார் ஆறும் நன்மை மான்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---